# குடும்ப விளக்கில் இல்லறத்தின் மாண்புகள்

***முனைவர் அ. வசந்தி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
போப் கல்லூரி, சாயர்புரம்

மலர்: 11

சிறப்பிதழ்: 1

மாதம்: ஏப்ரல்

வருடம்: 2024

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7899

***முன்னுரை***

*இருபதாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் தமக்கென்றோர் இடத்தைத் தம் தகுதியால் பெற்றவர் புரட்சிக்கவிஞர். மக்களுக்காக மக்களைப் பாடி, சமுதாய விழிப்புணர்வை ஊட்டிய படைப்புகள் பல. புரட்சிக்கவிஞரின் பரந்த படைப்புகளில் ஒன்றான குடும்பவிளக்கு கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள இல்லத்தரசியின் குணநலன்களை இன்றைய சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*

## இல்லறம்

பகுத்தறிவு படைத்த மனிதன் வாழ்க்கைக் கலையை நன்றாக ஆராய்ந்து இரு முக்கிய நெறிகளைக் கண்டறிந்தான். அவை, இல்லறம், துறவறம் எனப்படுகின்றன. இரண்டிற்குமே அடிப்படைத் தேவைகள் அன்பும், தியாகமும் தான். இல்லத்தில் சுற்றத்தாரோடு கூடியிருந்து அறநெறியில் வாழும் நெறி இல்லறம் எனப்படும். தான் பிறந்த இல்லத்தை துறந்து உலகோர் நன்மைக்காக சில அறங்களை மேற்கொண்டு வாழும் நெறி துறவறம் எனப்படும். தன்னலம் அணுவளவும் இல்லாமல் பிறர் நலத்திற்காகவே வாழ்பவர் துறவறத்தார். தன் இல்லத்தின் நலத்தை முதன்மையாகவும், பிறர் நலத்தை அடுத்ததாகவும் வைத்து வாழ்பவர் இல்லறத்தார்.

## இல்லத்தரசி

குடும்பம் என்பது முதியோர், இல்லத்தை நடத்திச் செல்வோர், குழந்தைகள் ஆகிய மூன்று தரத்தினரைக் கொண்ட ஒரு நிறுவனம். குடும்ப விளக்கில் மூன்று தரத்தினரையும் இல்லத்தரசி நடத்திச் செல்கிறாள்.

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பர். நல்ல குடும்பம் பல்கலைக்கழகம் எனக் குடும்ப விளக்கு நூலின் முன்னுரையில் கருத்துரைத்துள்ளார் புரட்சிக் கவிஞர். அன்பால் கட்டப்படுவதே குடும்பம். (Houses are built by bricks but homes are built by hearts) குடும்பப் பயிருக்கு அன்பு ஆணி வேராக உள்ளது.

## கடமைகள்

காலை முதல் இரவு வரை குடும்பத்தினரின் நலனுக்காக உழைக்கும் அன்பு, அறிவு, அருள், திறமை எனும் பண்பு நலன்கள் கொண்டுள்ள பெண்ணே பாவேந்தர் படைத்துக் காட்டியுள்ளார்.

*21ம் நூற்றாண்டில் குடும்ப விளக்கில் உள்ள மாண்புகள் நலிவடைவதை இன்றைய சமுதாயத்தில் காணமுடிகிறது. பெண்கள் அதிகாலையில் எழுந்து வீட்டைச் சுத்தம் செய்து கோலமிட்டு தன்னுடைய பணியைத் தொடருகின்றாள். பின்னர் சமையல் செய்து குழந்தைகளையும், கணவனையும் கவனிப்பதே பெண்ணின் தலை சிறந்த கடமையாகும். பெண்ணானவள் குடும்பத்துக்காக உழைத்து ஒளியூட்டுகிறாள். ஒரு நிலவினைச் சுற்றி நட்சத்திரங்கள் வாழ்வதனைப் போன்று மற்றவர்களுக்காக பொதுநலத்துடன் வாழ்பவள் பெண் என்பதை,*

***அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்***
***அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்***
***இதுவரைக்கும் பொதுநலத்துக் கென்னச் செய்தோம்?***
***என்பதை நாம் நினைத்துப் பார்ப்பது வுமில்லை.[1]***

*என்ற பாடல் உணர்த்துகிறது.*

### கல்வி

*பெண்கள் கல்வி கற்றிருந்தால் குடும்பமே கல்விச் செல்வத்தை இலவசமாக வாங்கிக் கொள்ளலாம். கல்வி கற்காத அம்மாவுக்கு குழந்தை உண்டேல். அந்தக் குழந்தைக்கு அறிவு கிடைப்பது அரிதாக காணமுடிகிறது.*

***"கல்வியில்லாத பெண்கள்***
***களர் நிலம்! அந்நிலத்தின்***
***புல் விளைந்திடலாம். நல்ல***
***புதல்வர்கள் விளைதல் இல்லை!"[2]***

*தமிழ்நாட்டில் முதற்படியாய் தமிழே படிக்க விரும்பும் பெண்ணாக படைக்கப்பட்டுள்ளாள்.*

***"மேற்படியார் செப்படி வித்தை பறக்கும்***
***முள்படில் ஆகாததுண்டா? எப்படிக்கும்***
***முதற்படியாய்த் தமிழ் படிக்க வேண்டும்***
***என்றார்.[3]***

### பெண்கல்வி

*வேத காலத்தைப் போலவே சங்க காலத்திலும் ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்றிருந்தனர் என்பதற்கு பெண்பாற் புலவர்களின், பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. ஔவையார், வெள்ளி வீதியார், காக்கைப்பாடினியார், முடத்தாமக் கண்ணியார், நன்னாகையார், வெண்ணியக்குயத்தியார், குறமகள், இளவெயினி, பாரிமகளிர், ஆதிமந்தி ஆகிய பெண்களின் பாடல்களில் காணமுடிகிறது. கல்வியில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு கூடாது. ஆணுக்குச் சமமான கல்வி கற்று, பெண்கள் வேலைக்குச் செல்லுதல் வேண்டும். படித்த பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கக் கூடாது என்கிறார் பெரியார். பெண்களுக்கு கல்வியானது மிகவும் அவசியம். தன்னுடைய குடும்பத்தை நல்ல முறையில் வளர்ப்பதற்கு கல்வி மிகவும் அவசியம்.*

**பெண்கட்கு கல்வி வேண்டும்**
**குடித்தனம் பேணுதற்கே**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**மக்களைப் பேணுதற்கே**
**பெண்கட்குக் கல்வி வேண்டும்**
**கல்வியைப் பேணுதற்கே.[4]**

*என்ற பாடல் கல்வியின் அவசியத்தை குறிப்பிடுகின்றது.*

### விருந்தோம்பல்

*தமிழர் பண்பாடு, தமிழர் ஒற்றுமை விருந்தோம்பலில் காணலாம். விருந்தினர்களுக்கு, வாழை இலையில் சாப்பாடு பரிமாறுகின்ற முறைகள், இரவு நேரங்களில் கேடு செய்யும் உணவுகளை விருந்தினர்களுக்கு உபசரிப்பதையும், தவிர்ப்பதையும் அறியமுடிகிறது. திருவள்ளுவரையும், இளங்கோவடிகளையும் பெரிதும் போற்றும் பாரதிதாசன் தன் குடும்ப விளக்குக் காப்பிய நாயகியை விருந்தோம்பலில் சிறந்தவளாக இருக்கச் செய்வதில் வியப்பில்லை.*

*புதுவைக்கு அருகில் உள்ள வில்லியனூர் என்ற கிராமத்திலிருந்து மாவரசன் என்ற செல்வரும் அவருடைய மனைவி மலர்க்குழலி மகள் நகைமுத்து மகன் நாவரசு ஆகியோர் குடும்ப விளக்கு நாயகியின் வீட்டிற்கு விருந்தினராக வருகின்றனர்.*

**"வருக! அம்மா வருக!**
**ஐயா வருக!**
**வருக! பாப்பா தம்பி..[5]**

விருந்தினர் வருகையை மாமிக்கு உரைக்கின்ற மருமகளாக உள்ளாள். மாமியின் அறிவுரைக்கேற்ப சமையல் செய்கிறாள்.

### உபசரிக்கின்ற முறை

விருந்தினருக்கு வாழை இலையின் அடிப்பகுதி உண்பவரின் வலப்பக்கம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளச் செய்கிறாள்.

**"வாழை இலையின் அடி**
**உண்பார் வலப்புறத்தில்**
**வீழ விரித்துக்"[6]**

### விருந்தினரை அழைத்துச் செல்லல்

விருந்தினர்களை வரவேற்க முதியவர்களால் வர இயலாமற் போனதற்கு அவர்களின் இயலாமையே காரணம் என்று கூறி தலைவி தன் வருத்தத்தை விருந்தினர்களிடம் விளக்கினாள்.

**படுத்திருங்கள் ஐயா!**
**படுத்திருங்கள் அம்மா!**
**அடுத்திருந்து பேசல்**
**அமையும் கடற்கிணையாம்"[7]**

### கணவன், மனைவி நட்பு

மனநிறைவு கொண்டவர்களால் தான் இரவில் நன்கு உறங்கமுடியும் என்பதற்கு ஏற்ப மனநிறைவு கொண்ட மணவழகரும், தங்கமும் நன்கு உறங்குகின்றனர்.

மனைவி, தங்கம் இல்லறத்தைச் செவ்வனே நடத்தியதால் தான், வறுமையும், பிணியும், பழியும் இல்லாமல் வாழ்வாங்கு வாழ முடிந்தது என்பதை மணவழகர் விளக்கினார்.

தன் கணவன் தூங்கினானோ என்று காண மணவழகரின் படுக்கைப் பக்கம் வருகிறாள். தங்கம், கணவனின் விருப்பத்துக் கேற்ப அவன் படுக்கையருகே வந்தாள் தங்கம். அன்புள்ளங்கள் இரண்டும் களித்ததைக் "கழறு மாறில்லை" என்று கவிஞர் பாடுகிறார்.

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்**
**பண்பும் பயனும் அது"[8]**
**அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு[9]**

கணவன், மனைவி முதியோராக வாழ்ந்தாலும் நட்பு குறையாமல் வலுவடைவதை காண முடிகிறது.

### முடிவுரை

இல்லத்தை உயர்த்துவது ஒன்றே தனது குறிக்கோளாகக் கொண்ட இல்லத்தரசி மாறுபாடுகளால் மனம் தளராது கடமையாற்றுவதை வலியுறுத்துகிறது.

அன்பே தெய்வக் குடியிருப்புக்குச் சொந்தமான பண்பு என்ற குறிக்கோளுடன் கணவன், மாமனார், மாமி, விருந்தினர்களிடம் உபசரிப்பதை காண முடிகிறது.

சமையல் தொழிலில் பெண்கள் சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

மனைவியாக மட்டுமல்லாமல் குழந்தை வளர்ப்பதில் தனிச்சிறப்பு வாய்ந்த தாயாக உலாவுகிறாள்.

வயது முதிர்ந்த காலத்தில் கணவனின் அரவணைப்பில் நூற்றாண்டு கால வாழ்க்கைச் சிந்திக்கிறாள்.

### அடிக்குறிப்புகள்

1. குடும்ப விளக்கு
2. குடும்ப விளக்கு ப.55
3. மேலது ப.26
4. மேலது ப.26
5. மேலது ப.29
6. மேலது ப.34
7. மேலது ப.37
8. திருக்குறள் - குறள் எண் 45
9. திருக்குறள் - குறள் எண் 72

### துணைநூற்பட்டியல்

1. கமலாமுருகன் பாவேந்தரின் குடும்ப விளக்கு, சாரதா பதிப்பகம் 200
2. சுந்தர சண்முகனார். திருக்குறள் தெளிவு - 1812.